இவ்வளவு வேகத்தில் வரக்கூடிய அந்த நேரத்தில் நாமும் புத்த கங்களை தயார் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளோம். தயார் செய்கிறோம். அந்த முயற்சியை நாம் எடுத்துக் கொண்டிருக்கி றோம். அந்த வேகத்தோடு நாமும், காம்பெடிஷன் என்ற அளவிலே இருக்கவேண்டும் என்பதையும் நாம் ஒரு கணம் சிந்தித் தாகவேண்டும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓமியோபதி மருத்துவத்தை விஸ்தரிக்கும் திட்டம்

297—(*வினா எண் 19338) திரு. ஆர். சுந்தரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி மருத்துவத்தை எல்லா வட்டங்களிலும் உள்ள அரசினர் மருத்துவ மனைகளில் விஸ்தரிக்க அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) தற்போது ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி களை தமிழகத்திலே பிற வட்டங்களிலேயும் பரவலாக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, தமிழகத்தில் ஹோமி யோபதி கல்லூரி அதிகமாக தொடங்கப்பட இருக்கிறது என்ற எண்ணம் இருந்து கொண்டு இருக்கிறது. தற்போது திருமங் கலத்தில் உள்ள ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியை ராம நாதபுரத்திற்கு மாற்றுவதாக ஒரு பீதி மக்களிடத்திலே இருக் கிறது. (குறுக்கீடு). எனவே, அரசாங்கம் இராமநாதபுரத்திலே ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்று இருந்தால், மேல் பட்டப்படிப்பை அங்கே வைத்துக் கொண்டு, திருமங்கலத்தில் இருக்கின்ற கல்லூரியை அங்கேயே இருக்கிற அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பீதியை 2, 3 முறை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். இப்போது அந்தக் கல்லூரி அங்கே நடந்து கொண்டிருக்கின்றது. நன்றாக நடந்துக் கொண்டிருக் கின்றது என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால் அங்கே மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கேட்டதைப் பற்றி, 22-ஆம் தேதியன்று இந்தத் துறைக்கான மானியக் கோரிக்கை வருகின்ற நேரத்திலே, தீர யோசனை செய்து சொல்கிறேன்.